நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்
06 OCT 2010
சேப்பாக்கம், சென்னை – 5

## சுருக்கம்

ஆக்கிரமிப்பினை வரன் முறை செய்தல் – நகராட்சிகளின் வசமுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து நீண்ட நாட்கள் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்குவது – தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 61 (2) மற்றும் 125 (2)–ன் கீழ் நடைமுறையிலுள்ள அதிகாரங்களை தொடர்ந்து செயல்படுத்துவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை(நிலை) எண்: 230 நாள் : 04 .10.2010.

படிக்க :

1. முதன்மை செயலர் (ம) நில நிர்வாக ஆணையர் கடித எண்.F1/27403/06, நாள் 26.6.2008.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண்.21848/ 2010/ டிபி2, நாள் 28.5..2010.

---

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்கள் அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு அவர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறைபடுத்தி வீட்டு மனைப் பட்டா வழங்கும் ஒரு முறை சிறப்பு திட்டத்தின் கீழ், நகராட்சிப் பகுதிகளில் உள்ளவர்கள் அதிக அளவில் பயன்பெற வேண்டும் என்ற காரணத்திற்காகவும், இத்திட்டம் சீரிய முறையில் செயல்படுத்த ஏதுவாகவும் நகராட்சி எல்லைக்குள் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப் படுத்துவதற்கு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 61 (2) மற்றும் 125 (2)ன் கீழ் விலக்கல் அறிக்கை அரசால் அரசிதழில் வெளியிடப்பட வேண்டுமென்றும் இதற்கு அதிக கால தாமதம் ஏற்படுகிறது என்பதால், மேற்காண் சட்டப் பிரிவின்கீழ் விலக்கல் அறிக்கையை மாவட்ட ஆட்சியரே வெளியிட வருவாய் துறையால் உத்தேசிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதத்தில் மைய அரசு, நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டம் (BSUP), ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP) மற்றும் இராஜீவ் காந்தி ஆவாஜ் யோஜனா போன்ற திட்டங்களில் "குடிசைகளற்ற நகரங்கள்" உருவாக்கப் பல்வேறு வீடு கட்டும் முயற்சிகளைத் தொடங்கி செயல்படுத்தி

வருகிறது என்றும், எனவே, நிலத்தில் அடுக்கு மாடி குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் நகர் நல பயன் அடைவது மட்டுமல்லாமல், அதிகப்படியான நகர்புற ஏழை மக்கள் பயன் அடைவர் என்றும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிய குடிநீர் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்த நிலங்கள் தேவைப்படுவதால் தற்போதுள்ள சட்டப்பிரிவுகளின் கீழ் உள்ள அதிகாரங்களே தொடரலாம் என்றும், எனவே, மேற்படி காரணங்களுக்காக இப்பொருள் குறித்து அதிகாரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

4. மேற்காணும் பொருள் குறித்து அரசு கவனமுடன் ஆராய்ந்தது. ஆய்வுக்குப் பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்தினை ஏற்று, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 61(2) மற்றும் 125 (2)-ன் கீழ் நகராட்சியின் எல்லைக்குள் உள்ள நகராட்சி வசமுள்ள ஆக்கிரமிப்புகளை வரைமுறைப்படுத்த வெளியிடப்படும் விலக்கல் அறிவிக்கையினை (withdrawal Notification) வெளியிட தற்போது நடைமுறையில் உள்ள நிலையே தொடரலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாசாணை வருவாய்த் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை - 5.

நகல்:
வருவாய்த் துறைச் செயலரின் தனிச்செயலர், சென்னை-9.
வருவாய்த் துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை- 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளரின் தனிச் செயலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 4/10/10